இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 31.10.2026

கலையரசன் கைதும் த.வெ.க.வின் பாசிசமும்

தற்குறிகளின் உலகத்துக்கு வேண்டுமானால் கலையரசனைத் தெரியாமல் இருக்கலாம். அறிவுலகம் அவரை அறியும். சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர். இந்தியாவின் தலைசிறந்த டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். 'The Dravidian Modal' நூலின் ஆசிரியர். "தமிழ்நாட்டில் விலைவாசி எகிறி வருகிறது" என்று பேட்டி கொடுத்த காரணத்துக்காக வேட்டையாடி இருக்கிறது த.வெ.க. அரசு.

அவர் நடத்தப்பட்ட விதம் அச்சம் தருவதாக உள்ளது. மாநிலம் எத்தகைய மாஃபியாக்களின் கையில் சிக்கி இருக்கிறது என்பதற்கு கலையரசன் விவகாரம் ஒரு எடுத்துக்காட்டு.

கலையரசனை அதிகாலை ஐந்து மணிக்கு வீடு புகுந்து தூக்க வந்தவர்கள் யார் என்று தெரியாது. அவர்கள் எந்தச் சீருடையும் அணிந்திருக்கவில்லை. அவர்கள் எந்தக் காவல் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியாது. வந்தவர்கள் போலீஸா, அல்லது த.வெ.க. இதற்கென வளர்த்து வரும் ஆட்களா எனத் தெரியவில்லை. போலீஸ் வாகனத்தில் வரவில்லை. தனியார் வாகனத்தில் வந்திருக்கிறார்கள். வந்த காரணமும் சொல்லவில்லை. கலையரசனை அழைத்துச் சென்றுள்ளார்கள். இரண்டரை மணி நேரம் காரில் வைத்து சுற்றிவிட்டு அவரை எங்கிருந்து ஏற்றிக் கொண்டார்களோ அங்கேயே கொண்டு போய் விட்டுள்ளார்கள்.

இப்படி யார் செய்வார்கள்? பிளாக் மெயில் தொழில் நடத்துகிறவர்கள் செய்வார்கள். குழந்தைக் கடத்தல்காரர்கள் செய்வார்கள். இப்படி ஒரு அரசாங்கம் செய்திருக்கிறது. ஆம். அமைச்சர் நிர்மல் குமார் ஒப்புக் கொண்டு இருக்கிறார்.

ஐந்து ஆண்டுகளில் ஐந்து கட்சி மாறிய அமைச்சர் நிர்மல் குமார் சொல்கிறார்... 'போலீஸ் ஸ்டேஷனில் தவறு நடந்து விட்டது' என்று. எந்த போலீஸ் ஸ்டேஷனில் தவறு நடந்தது? தவறு செய்தவர்கள் யார்? தவறு செய்யச் சொன்னவர்கள் யார்?

திடீரென்று புகுந்து ஒரு ஆய்வாளரை, எழுத்தாளரை, விமர்சகரை - அதிகமாக ஆங்கிலத்தில் எழுதி தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றை உலகம் முழுக்க கொண்டு சேர்க்கும் ஒருவரைக் கடத்திச் செல்லும் அளவுக்கு அவரது புத்தகத்தில் எதையாவது குறைகண்டு பிடித்துவிட்டாரா அந்த போலீஸ்காரர்? அல்லது நிர்மல்குமார்? அல்லது விஜய்?

சாதாரணமாக ஒரு ஸ்டேஷன் இன்ஸ்பெக்டரோ, சப் இன்ஸ்பெக்டரோ, ஏட்டையாவோ நினைத்தால் இதைச் செய்து விட முடியுமா? ஏ.சி.; டி.சி., நினைத்தால் கூட இதைச் செய்ய முடியுமா? முடியாது.

கலையரசன் மீது அம்பை ஏவச் செய்தது யார்? அதைச் சொல்லுங்கள். அவர் செய்த குற்றம் என்ன?

பல்லாவரம் எம்.எல்.ஏ. காமாட்சி பற்றி தவறான பதிவு போட்டாராம், சொல்கிறார் அமைச்சர் நிர்மல்குமார். 'கலையரசன் படமும் பேரும் இருந்தது' என்று நிர்மல்குமார் சொல்வதே பொய். அந்தப் பதிவில் கலையரசன் படம்தான் இருந்தது. பெயர் இல்லை. கலையரசன் படத்தை வைத்திருக்கும் யாரோ ஒருவர் இப்பதிவு போட்டுள்ளார் என்றே வைத்துக் கொள்வோம். அதற்கு கலையரசன் எப்படி பொறுப்பு ஆவார்? 'கலையரசன் பெயர் இருந்தது' என்று பச்சைப் பொய்யை கூசாமல் சொல்கிறார் நிர்மல். 'விஜய மணிகண்டன்' என்ற பெயர்தான் அதில் இருக்கிறதே தவிர, கலையரசன் என்ற பெயர் இல்லை.

விஜய் படத்தைப் போட்டு ஆபாசப் பதிவுகள் போடுகிறவர்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்வாரா விஜய்? இதற்கு லட்சக்கணக்கான ஆபாசப் பதிவுகளை ஆதாரமாகக் காட்டலாம்.

கலையரசன் பெயரைப் பயன்படுத்தி போலியான கணக்கு தொடங்கி, அவரைக் கைது செய்துள்ளார்கள் என்றும் சந்தேகிக்கத் தோன்றுகிறது.

பல்லாவரம் எம்.எல்.ஏ., காமாட்சி இது தொடர்பாக எந்தக் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்? அதுவுமில்லை. காமாட்சியை விடுங்கள். பாவம் அவர். அமைச்சர்கள் நிர்மல்குமாரையும் சரத்குமாரையும் இன்னும் பலரையும் விமர்சித்து சமூக வலைதளங்களில் வரும் பதிவுகளைப் பார்க்கவில்லையா? எத்தனை லட்சம் பேரை கைது செய்வீர்கள்? போதை வழக்கில், பாலியல் வழக்கில் ஒவ்வொரு த.வெ.க. ஆட்களும் சிக்கும் போது அதற்கான பின்னூட்டத்தைப் போய் பாருங்கள். எத்தனை லட்சம் பேரைக் கைது செய்வீர்கள்? 'வெற்றி ஜெயில்' தான் கட்ட வேண்டும்.

"வீட்டிலிருந்து காரில் ஏற்றிச் சென்று பல்லாவரம் அருகே காரை நிறுத்தி முக்கால் மணி நேரம், செல்போனில் யாரிடமோ பேசினார்கள். அதன் பின்னர் என்னை வீட்டில் இறக்கிவிட்டனர். பாதிக்கப்பட்ட என்னை, குற்றவாளி போல நடத்தினர்" என்று சொல்லியிருக்கிறார் கலையரசன். அவரைக் குற்றவாளி போல நடத்தச் சொன்னது யார்? போனில் யாரிடம் பேசினார்கள் கடத்தல்காரர்கள். கலையரசனை அச்சுறுத்தச் சொன்னது யார்?

இதுதான் பாசிசம் ஆகும். தனது அரசியல் எதிரிகளை பாசிசம் இப்படித்தான் அச்சுறுத்தும். இது கைதை விட மோசமானது. கைது என்பதற்குச் சட்டரீதியான அங்கீகாரம் உண்டு. ஆனால் அதிகாலையில் தூக்கிச் சென்று இரண்டு மணிநேரம் எங்கோ வைத்து மீண்டும் கொண்டு வந்து விடுவது - கைது, சிறைச்சாலை என்பதை விட மிக மோசமானது.

'அவங்க பாசிசம் என்றால் நீங்க பாயாசமா?' என்பது விஜய்யின் புகழ்பெற்ற டயலாக். பாயாசமாகச் சொல்லி மக்களை ஏமாற்றி பாசிசத்தை பந்தி வைத்துக் கொண்டு இருக்கிறார் விஜய். அவரது ஆட்சியை, அவரை, அவரது அமைச்சர்களை விமர்சிப்பவர்கள் அனைவரையும் பாசிச வேட்டை தான் ஆடிக் கொண்டு இருக்கிறார் விஜய்.

இந்த விவகாரத்தில் மெய்சிலிர்க்க வைக்கும் கருத்தைச் சொல்லி இருக்கிறார் த.வெ.க. ஆதரவுக் கட்சியின் தலைவர் ஒருவர். 'அதிகாலை 5 மணிக்கு கைது செய்யுங்கள் என்று முதலமைச்சர் விஜய் சொல்லி இருக்க மாட்டார். எப்படி கைது செய்வது என்பது எல்லாம் காவல் துறை முடிவு செய்வதுதான். கும்பல் கூடக் கூடாது என்பதற்காக அந்த நேரத்தில் கைது செய்திருக்கலாம்' என்கிறார் அந்தத் தலைவர். இந்த நூற்றாண்டின் மனித உரிமைப் போராளி விருதை அந்தத் தலைவருக்குத் தரலாம். அமைச்சர் பதவிக்காக ஒரு ஆட்சியை ஆதரிக்கலாம். கெட்ட ஆட்டத்தை எல்லாம் இப்படியா ஆதரிப்பது?

இப்போது நடந்து கொண்டிருப்பது பாசிச ஆட்சி தான். விஜய் அப்பாவி அல்ல. எதுவும் தெரியாதவர் அல்ல. எல்லாத் தவறுகளும் அவருக்குத் தெரிந்தே நடக்கின்றன. சினிமாவை ரூட் மாஃபியா மூலம் ஆட்டிப்படைத்த அதே பாணியை அரசியலிலும் செயல்படுத்தி வருகிறார் விஜய்.

●●

தனியார் கூட்டுறவு நிதி நிறுவனம் ஒன்றை நடத்தி மக்கள் முதலீடு செய்த

5 ஆயிரம் கோடி ரூபாய் மக்கள் பணத்தைக் கொள்ளையடித்த BLM பிரேம் குமாருக்கும் தூய சக்தி முதலமைச்சருக்கும் என்ன தொடர்பு?

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் காட்டமான கேள்வி!



சென்னை, அக்.31-

5 ஆயிரம் கோடி ரூபாய் மக்கள் பணத்தைக் கொள்ளை அடித்த BLM பிரேம் குமாருக்கும் தூய சக்தி முதலமைச்சருக்கும் என்ன தொடர்பு! என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் காட்டமாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

5 ஆயிரம் கோடி ரூபாய் மக்கள் பணத்தைக் கொள்ளை அடித்த BLM பிரேம்குமாருக்கும் தூய சக்தி முதலமைச்சருக்கும் என்ன தொடர்பு?

தனியார் கூட்டுறவு நிதி நிறுவனம் ஒன்றை நடத்தி மக்கள் முதலீடு செய்த பணத்தை தன்னுடைய சொந்தக் கணக்கிற்கு வரவு வைத்துக் கொண்டதாக பிரேம்குமார் என்பவரை கேரள காவல்துறை கைது செய்துள்ளது.

இந்த பிரேம்குமார் கடந்த ஜூலை மாதம் தான் இங்கிருக்கும் Dummy CM-ஐ சந்தித்து புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கிறார். மேலும், த.வெ.க-வின் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு பிரேம்குமாருக்கு சொந்தமான பேருந்துகள் தான் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன.

முக்கியமாக சட்டப்பேரவைத் தேர்தல் முடிந்து, நம்பிக்கை வாக்கெடுப்பு நடப்பதற்கு முன்பாக ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் பிரேம்குமாரின் பேருந்துகளிலேயே அழைத்து வரப்பட்டனர்.

பிரேம்குமாருக்கும் முதலமைச்சருக்கும் இருக்கும் நெருக்கத்தைப் பார்க்கும் போது, அந்த நபருக்கும் - ஆளுங்கட்சிக்கும் இடையே இருக்கும் தொடர்பு என்ன?

அப்படி எந்த "விவகாரமான"தொடர்பும் இல்லை எனில், ஏன் அவசர அவசரமாக, முதலமைச்சரும் - கைது செய்யப்பட்டுள்ள நபரும் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை தமிழ்நாடு காவல்துறை உதவியோடு சமூக வலைதளப் பக்கத்தில் இருந்து அகற்ற வேண்டும்?



முதலமைச்சரும் - கைது செய்யப்பட்டுள்ள நபரும் எடுத்துக்கொண்ட இந்தப் புகைப்படம், தமிழ்நாடு காவல்துறை உதவியோடு சமூக வலைதளப் பக்கத்தில் அகற்றப்பட்டுள்ளது.

MLA-க்களை Purchase செய்வது, Sofa அனுப்புவது, இடைத்தேர்தல்களில் வாரி இறைத்தது என்று த.வெ.க.வின் முறைகேடான அரசியல் செயல்பாடுகளுக்கும் இவருக்கும் தொடர்பு இருக்கிறதா?

இதையெல்லாம் CBI, SFIO, ED போன்ற ஒன்றிய அரசின் தன்னாட்சி அதிகாரம் கொண்ட விசாரணை அமைப்புகள் தலையிட்டு விசாரிக்க வேண்டும் - கைதான பிரேம்குமாருக்கும், த.வெ.க. தலைமை முதல் முக்கிய நிர்வாகிகள் வரைக்கும் இருக்கும் தொடர்பை கண்டறிய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பல இடங்களில் சோதனை செய்தும் அவர்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை;

எதிர்ப்பவர்கள் மாறுவார்களே தவிர தி.மு.க. என்றைக்கும் மாறாது நிலைத்திருக்கும்!

திருச்சியில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனைக்குப் பின் - முன்னாள் அமைச்சர் கே.என். நேரு பேட்டி!

திருச்சி, அக்.31-

எதிர்ப்பவர்கள் மாறுவார்களே தவிர தி.மு.க. என்றைக்கும் மாறாமல் நிலைத்திருக்கும் என்று திருச்சியில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனைக்குப் பின் பேட்டியளித்த முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு குறிப்பிட்டுள்ளார்.

அவரது பேட்டி வருமாறு:-

இந்த முறையும் சோதனையில் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் கடந்த முறையை காட்டிலும் இந்த முறை அதிக இடங்களில் சோதனை செய்துள்ளார்கள்.

என் சகோதரர் மணிவண்ணன் பிஸினஸ் ரீதியாக வைத்துள்ள 2 லேப்டாப்புகளை எடுத்துச் சென்றுள்ளார்கள்.

சட்டம் - ஒழுங்கு சீர்கேடுகள், தேனி சிறையில் இருந்து கைதிகள் தப்பித்தது உள்ளிட்டவற்றை திசை திருப்பவே இந்த சோதனை நடத்தப்பட்டு இருக்கலாம். இது குறித்து எங்கள் கட்சித் தலைவர் கூறியது சரிதான்.

திருச்சி கிழக்கு இடைத்தேர்தலை மையப்படுத்தி தான் இந்த சோதனை என நான் நினைக்கவில்லை.

தொண்டர்கள்
வெற்றி பெற வைப்பார்கள்!

நாங்கள் இருந்தால் தி.மு.க. வெற்றி பெறும் இல்லையென்றால் தோல்வி அடையும் என்பது அல்ல. மக்கள் தான் முடிவெடுத்து வெற்றி பெற வைப்பார்கள்.



எங்கள் கட்சி தலைவர் கூறுவதை தட்டாமல் செய்வது தான் எங்களுடைய வேலை. நான் மட்டும் தி.மு.க. இல்லை எங்களிடம் லட்சக்கணக்கான தொண்டர்கள் இருக்கிறார்கள். நான் இல்லை என்றாலும் எங்களுடைய தொண்டர்கள் பணியாற்றி தி.மு.க.வை தேர்தலில் வெற்றி பெற வைப் பார்கள்.

ஏற்கனவே முன்னாள் அமைச்சர் அன்பில் மகேசை கைது செய்துள்ளார்கள். இன்று என் வீட்டில் சோதனை செய்ய வந்துள்ளார்கள். திசை திருப்பத்தான் இதை செய்கிறார்கள்.

தி.மு.க. ஆட்சியில் எங்களுக்கு சொந்தமான இடத்தில் அமலாக்கத்துறை சோதனை செய்தார்கள். அதனைத் தொடர்ந்து அரசுக்கு வழக்குப்பதிவு செய்ய அறிவுறுத்தினார்கள். தி.மு.க. ஆட்சிக்குப் பின்பு தற்போது த.வெ.க ஆட்சியில் வழக்கு பதிவு செய்து சோதனை செய்கிறார்கள். இது எனக்கு மட்டும் தான். அன்பில் மகேஷ் விவகாரத்தில் புதிதாக தான் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

என்னிடம் எந்த கேள்வியும் கேட்கவில்லை. என் வீட்டில் சோதனை செய்தார்கள்.

சோதனை - கைதை
எதிர்கொள்வோம்!

சோதனை, கைது உள்ளிட்டவற்றை ஏற்கனவே ஜெயலலிதா ஆட்சி காலத்தில் தி.மு.க. எப்படி எதிர்கொண்டதோ அதே போல இந்த ஆட்சியிலும் எதிர் கொள்வோம். ஜெயலலிதா எல்லா அமைச்சர்கள் மீதும் நில அபகரிப்பு வழக்குப் பதிவு செய் தார்கள். அதை நீதிமன்றத்தில் வாதாடி வெற்றி பெற்று வந்துள் ளோம். அதேபோல நீதிமன் றத்தை நாங்கள் நாடுவோம்.

உயர்நீதிமன்றம் இந்த லஞ்ச ஒழிப்புத் துறை பதிவு செய்த வழக்கை தள்ளுபடி செய்ய நாங் கள் தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவை உயர்நீதிமன்றம் தள்ளு படி செய்துள்ளார்கள். இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் நாங்கள் மேல்முறையீடு செய் துள்ளோம்.

தி.மு.க.வைப் பொறுத்தவரை வெற்றி தோல்வி குறித்து கவலைப்படுவது இல்லை. தாரா புரத்தில் மூன்றாவது இடத்தில் இருந்து இடைத்தேர்தலில் இரண் டாவது இடத்திற்கு வந்தோம், அதே போல மதுராந்தகத்திலும் இரண்டாவது இடத்திற்கு வந் துள்ளோம். ஆளுங்கட்சியின் வெற்றி வித்தியாசம் குறைந்துள் ளது. நாங்கள் தேர்தலை சந்திக் கும் போதே நம்பிக்கையாக சந்திக்கிறோம்.

திரைத்துறையில் இருந்து யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரட்டும்.

தி.மு.க-வை எதிர்த்து களம் கண்ட மாபெரும் தலைவர்களின் வரிசை நீண்டு கொண்டே செல் கிறது. காமராஜர் காலம் தொடங்கி, எம்.ஜி.ஆர்., ஜெய லலிதா மற்றும் தற்போதைய விஜய் வரை தி.மு.க.வை எதிர்த்த முகங்கள் காலத்திற்கேற்ப மாறிக்கொண்டே தான் இருக் கின்றன. ஆனால், தி.மு.க. என்ற ஒற்றை இயக்கம் தமிழக அரசிய லில் நிலையாகத் தொடர்கிறது.

தி.மு.க. என்றுமே நிலைத் திருக்கும். தி.மு.க.வை எதிர்ப்ப வர்கள் வேண்டுமானாலும் மாற லாம். ஆனால் தி.மு.க. என்றைக் குமே நிலையாக நிற்கும்.

சோதனையை தொடர்ந்து கைது இருக்குமா என்கிற கேள் விக்கு யூகமாக எந்த பதிலும் கூற முடியாது.

இவ்வாறு அவர் பேட்டி யளித்தார்.